Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

THURSDAY, JANUARY 6, 2022

வியாழக்கிழமை ஜனவரி 06, 2022 | ஒளி: 07 கதிர்: 198 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



டிக் டொக் படுகொலை

# சிறுவர்கள் அறுவருக்கு விளக்கமறியல்

கொழும்பு-14, கிராண்ட்பாஸ் பகுதியில், வெல்லம்பிட்டியைச் சேர்ந்த 17 வயதான இளைஞனை கத்தியால் குத்தி கொன்ற சம்பவம் தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சிறுவர்கள் அறுவரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் காஞ்சனா நெரஞ்சனி சில்வா, நேற்று (05) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

அரசாங்கத்திலிருந்து வெளியேறும் காலம்

# தொலைவில் இல்லை



- தயாசிறி தெரிவிப்பு: சு.கா இல்லையெனில் கோட்டா இல்லை என்கிறார்.
- மொட்டில் வரச்சொன்னவர்கள், மொட்டில் மாத்திரம் வந்துவிடவேண்டாம் என்கின்றனர்

இந்த அரசாங்கத்துக்காக அர்ப்பணிப்புடன் வாக்களித்த மக்கள், இன்று வீதியோரங்களில் நின்று அரசாங்கத்தை கெட்ட வார்த்தைகளால் திட்டுவதாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, இந்த அரசாங்கத்தை விட்டு வெளியேறுமாறு எம்மிடம் பலரும் தெரிவிக்கின்றனர் என்றார்.

கொழும்பில் நேற்று (05) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

தொடர்ச்சி P2

வரி சட்டமூலம் மற்றும் திருத்தம்

# சபையின் அனுமதிக்கு சமர்ப்பிப்பு

சிறப்பு பொருட்கள், சேவை வரி சட்டமூலம் மற்றும் பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டமூலம் ஆகியவை அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதிக்குப் பின்னர், வர்த்தமானியாக வெளியிடப்பட்டு பாராளுமன்ற அனுமதிக்காக நேற்று (05) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

நிலுவைகளை மாற்றுமாறு

# வங்கிகளை கட்டாயப்படுத்தவில்லை

**கப்ரால் தெரிவிப்பு: முதிர்ச்சியடையும் முறிகளுக்கும் நிதி ஒதுக்கீடு**

வாடிக்கையாளர்களின் அந்நிய செலாவணி கணக்குகளில் உள்ள நிலுவைகளை வலுக்கட்டாயமாக மாற்றுமாறு இலங்கையிலுள்ள வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கி உத்தரவிட்டுள்ளது என்ற வதந்திகளை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நேற்று (05) காலை நிராகரித்தார்.

தொடர்ச்சி P2



## மலையகத்தில் மகாராணியின் கோல்

பொதுநலவாய நாடுகளுக்கான மகாராணியின் கோலை ஏந்திய குழுவினர் (05) புதன்கிழமை காலை பொகவந்தலாவ கேர்க்கஸ்வோல்ட் தோட்ட தொழிற்சாலையை வந்தடைந்தனர். மேலதிக படங்கள் 7ஆம் பக்கத்தில்
(படங்கள்: எஸ். சதீஸ்)

பாடசாலைகளுக்கு விதித்திருந்த

# கட்டுப்பாடுகள் திங்கள் முதல் நீக்கம்

**12 – 15 க்கும் இடைப்பட்டோருக்கு தடுப்பூசி**



எதிர்வரும் திங்கட்கிழமை (10) முதல் நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் முதலாம் தரம் முதல் 13 ஆம் தரம் வரையான கல்வி நடவடிக்கைகளை சாதாரண நடைமுறைகளுக்கமைய முன்னெடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவரத்னவால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



ஈஸ்டர் தாக்குதல்

# சந்தேகநபர் மரணம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் (04) மரணமடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

பதவி நீக்கம் தொடர்பில்

# ஜனாதிபதி கருத்து வெளியிடுவார்



“இராஜாங்க அமைச்சர் ஒருவர் அமைச்சரவையை விமர்சிக்கின்றமை தொடர்பில் எம்மிடம் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இதன்போது பலர் ஜனாதிபதி ஏன் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும்

தொடர்ச்சி P2

# ராஜிதவுக்கும் ரொஷானுக்கும் கொரோனா தொற்று உறுதி





ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவருக்கு நடத்தப்பட்ட ரெபிட் அன்டீஜன் பரிசோதனையில், கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளார்.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுடன்,

தொடர்ச்சி P2

Perpetual Treasuries Limited
For all your astute investments
Central Bank Appointed Primary Dealer

பெர்பெட்சுவல் ட்ரெஷரீஸ் இடைநிறுத்தம்

# மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பு

பெர்பெட்சுவல் ட்ரெஷரீஸ் லிமிடெட் (பிரிஎல்) அதன் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதிலிருந்தும் முதனிலை வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்துமான இடைநிறுத்தத்தினை மேலும் ஆறுமாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி, நேற்று (05) அறிவித்தது.

தொடர்ச்சி P2



நாட்டைக் கட்டியெழுப்ப

# எதிர்கால திட்டங்கள் அவசியம்

நாட்டைக் கட்டியெழுப்புவதாயின் எதிர்காலத் திட்டங்கள் அவசியம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, திட்டங்களை அமல்படுத்தும் போது, மிகவும் உணர்வுபூர்வமான தேவைகளை கவனத்தில் கொள்ள வேண்டும்; இல்லையேல் பேராபத்தே ஏற்படும் எனத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கிறார் மைத்திரி

சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரபால சிறிசேன கருத்து தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, குழம்பிய குட்டையில் மைத்திரி, மீன்பிடிக்கப் பார்க்கிறார் எனவும் சாட்டினார்.

தொடர்ச்சி P2




## ஊசி செலுத்தும் ஊழியரிடம் பொய் சொல்ல வேண்டாம்

கொரோனாவுக்கு எதிரான ஃபைசர் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸைப் பெறுவதற்காக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மற்றும் வைத்தியசாலைக்குச் செல்பவர்கள், தமது மருத்துவ

தொடர்ச்சி P2

# தமிழகத்தில் இன்றுமுதல் இரவு ஊரடங்கு அமல்



ஓமிக்ரோன் தொற்று மிகவேகமாகப் பரவிவரும் நிலையில், இந்தியாவில் பல மாநிலங்களில் அதிரடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் வார நாள்களில் இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணி வரை இரவு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. இது, இன்று (06) முதல் நடைமுறைப்படுத்தப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தொலைவில் இல்லை

அன்று மொட்டைத் தவிர வேறெதிலும் எம்மை வரவேண்டாமென கூறிய கிராம மக்கள், இன்று மொட்டில் மாத்திரம் வந்து விட வேண்டாம் என்கின்றனர். எனவே நாம் இந்த அரசாங்கத்தை விட்டு வெளியேறும் காலம் தொடர்பில் எமது கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் கலந்துரையாடுவோம் என்றார்.

அரசாங்கத்திலிருந்து விலகும் நேரத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானிக்குமென தெரிவித்த அவர், சுதந்திரக் கட்சியில்லை என்றால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் 50 சதவீதமான வாக்குகள் கூட கிடைத்திருக்காதெனவும் கடுந்தொனியில் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் நாட்டில் தனிக்கட்சி ஆட்சியமையாது. எனவே சு.கவுடன் இணைந்து பயணிக்கக்கூடிய கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைப்போம். ஜனாதிபதியை ஆட்சிக்குக் கொண்டுவந்தவர்கள் என்றவகையில் ஜனாதிபதியை விமர்சிக்கும் அதிகாரம் எமக்கிருக்கிறது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 15 இலட்ச வாக்குகள் இல்லை என்றால், ஜனாதிபதிக்கு 69 இலட்ச வாக்குகள் கிடைத்திருக்காது எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருக்கும் காலம் வரையில் நாட்டை தவறான பாதைக்கு இட்டு செல்வதற்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 16 எம்.பிகளுக்கும் வாக்களிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படக்கூடிய அனைத்து கட்சிகளையும் நாம் ஒன்றிணைப்போம். எதிர்காலத்தில் தனிக்கட்சி ஆட்சியமைக்காது. எவராலும் தனித்து ஆட்சியை அமைக்கவே முடியாது. தனிக்கட்சி ஆட்சியமைக்குமென எவராவது நினைத்துகொண்டிருப்பார்கள் என்றால், அவர்களுக்கு மனநலம் பிரச்சினை இருக்கும் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இல்லை என்றால் நூற்றுக்கும் 50 சதவீதமான வாக்குகளைக்கூடி ஜனாதிபதி கோட்டா பெற்றிருக்க மாட்டார். அரசாங்கத்திலிருக்க வேண்டாம். அரசாங்கத்திலிருந்து விலகுங்கள் என்றே செல்லும் இடமெல்லாம் எம்மிடம் கூறுகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

## சிறுவர்கள் அறுவருக்கு...

மேலும் ஆறு சிறுவர்களையும் சிறைச்சாலை பாதுகாப்பில் மாகொல சிறுவர் இல்லத்தில் தடுத்து வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் 12 மற்றும் 16 வயதுடையவர்கள் என கிராண்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லம்பிட்டியைச் சேர்ந்த 17 வயதான அப்துல் லத்தீப் என்ற இளைஞன், டிக் டொக் சமூக ஊடக வலையமைப்பினால் ஏற்பட்ட மோதலால், படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், மாணவர்கள் மூவர் உட்பட, அறுவர் நேற்று முன்தினம் (04) கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரந்திய உயன தொடர்மாடி குடியிருப்புக்கு தனது நண்பர்களுடன் குறித்த இளைஞன், மோட்டார் சைக்கிளில் ஜனவர் 3ஆம் திகதி சென்றுள்ளார்.

அவர்களை பின்தொடர்ந்து வந்த மற்றுமொரு தரப்பினர், டிக் டொக் வீடியோ தொடர்பில் வாக்குவாத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் பின்னர், மறைத்து வைத்திருந்த கத்தியால் அவ்விளைஞனின் அடிவயிற்றில் குத்தியுள்ளனர். அதன்பின்னர், அங்கிருந்து அவர்கள் தலைமறைவாகிவிட்டனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இந்நிலையிலேயே மேற்படி அறுவரும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சபையின் அனுமதிக்கு...

கடந்த ஜனவரி மாதம் 3ஆம் திகதி நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு பச்சைக்கொடி காட்டப்பட்டது.

2021 மற்றும் 2022 வரவு செலவுத் திட்டத்தில், மதுபானம், சிகரெட்டுகள், தொலைத்தொடர்பு, பந்தயம் மற்றும் கேமிங் மற்றும் வாகனங்கள் மீதான வரி வசூலின் திறனை அதிகரிக்க ஒன்லைனில் நிர்வகிக்கப்படும் ஒரே வரியுடன் பல்வேறு சட்டப்பூர்வ சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்ட வரிகள் மற்றும் தீர்வைகளை மாற்றுவதற்கான முன்மொழிவு இருந்தது.

அதேவேளை, 2022 வரவு செலவுத்திட்ட நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரியை அதிகரிக்கவும், தொற்றுநோய் அல்லது பொது சுகாதார சூழ்நிலையில் அர வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார அமைச்சுக்கு நன்கொடையாக வழங்கப்படும் மருத்துவ உபகரணங்கள், சாதனங்கள் மற்றும் இரசாயனங்களுக்கு பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்கு அளிக்கவும் முன்மொழியப்பட்டது.

எனவே, சட்டமா அதிபரின் அனுமதிக்கு அமைய, சிறப்பு பொருட்கள் மற்றும் சேவை வரிசட்டமூலம் மற்றும் சட்ட வரைவாளரால் தயாரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

## வங்கிகளை...

இதுபோன்ற தவறான வதந்திகளை சில சக்திகள் பரப்பி வருகின்றன என்று தமது டுவிட்ட பதிவின் மூலம் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை மேற்கோள்காட்டி பயனாளிகளின் அனுமதியின்றி அந்நிய செலாவணி கணக்குகளை உள்ளூர் வங்கிகள் மாற்றியதாக சமீபத்தில் அறிக்கைகள் வெளிவந்ததையடுத்தே ஆளுநர் இவ்விடயத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனவரி 18ஆம் திகதியுடன் முதிர்ச்சியடையும் சர்வதேச முறிகளுக்குத் தேவையான 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் கப்ரால் தெரிவித்துள்ளார்.

சில தரப்பினரின் கூற்றுக்கள் இருந்தபோதிலும், மத்திய வங்கி தனது கடமைகளை மதிக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்று தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்மறையான கதைகளின் விளைவாக சில முதலீட்டாளர்கள் நஷ்டமடைந்தனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு கையிருப்பு குறைவதால், மத்தியவங்கி தனது கடன் பொறுப்புகளை நிறைவேற்ற சிரமப்படும் என்று பல்வேறு பகுதிகளிலுமிருந்து கவலைகள் எழுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி கருத்து...

எடுக்கவில்லை என வினவினர். சிலர் ஏன் இதனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என கேட்டனர். அதனால் தான் ஜனாதிபதி இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்திருப்பார்" என தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, எனவே இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் ஜனாதிபதி கருத்து தெரிவிப்பார் என்று தெரிவித்தார்.

அரசாங்கத்துக்குள் இருக்கும் போது சகலருக்கம் கூட்டு பொறுப்பு ஒன்று உள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகள் பிடிக்கவில்லை என்றால், அமைச்சரவை சந்திப்பிலோ குழு கூட்டத்திலோ கதைக்க முடியுமே தவிர, பொது இடங்களில் அது குறித்து கருத்து வெளியிடுவது ஆரோக்கியமான விடயமல்ல என்றார்.

எனவே எவராயினும் அது தானாக இருந்தாலும். தமது பொறுப்புகளை நிறைவேற்றும் போது தமது அமைச்சரவையிலுள்ள சகோதர அமைச்சர்களை விமர்சிப்பது தவறு என சுட்டிக்காட்டினார்.

தற்போதைய காலகட்டத்தில் இந்த அரசாங்கத்தை பாதுகாப்பதற்காக சில அர்ப்பணிப்புகளை செய்வதாயின் தனது அமைச்சிலும் மாற்றங்கள் ஏற்படுமாயின் அது வரவேற்க கூடிய விடயம் என்றார்.

அரசாங்கம் என்ற ரீதியில் எமக்கென்று பொறுப்புள்ளது மக்களை பாதுகாக்கவும் மக்கள் ஏதோவொரு இடத்தில் அசௌகரியத்துக்கு உள்ளாகியிருக்கும் போது, மக்களின் கருத்துகளுக்கு செவிமடுத்து அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் வழங்க கூடிய வகையில் செயற்பட வேண்டும் என குறிப்பிட்டார்.

நாம் தொடர்ச்சியாக கூறி வந்தோம் இது கடினமான காலம் என்று. உண்மையில் இது அரசாங்கத்துக்கு கஷ்டமான காலம் தான். அரசாங்கம் மக்களின் வரிப் பணத்தில் தான் சம்பாதிக்கின்றது என தெரிவித்தார்.

## கட்டுப்பாடுகள் திங்கள் முதல் நீக்கம்

நாடு முழுவதும் கொரோனா பரவல் அதிகரித்து வந்தநிலையில், தற்காலிகமாக மூடப்பட்ட பாடசாலைகள், சில கட்டுப்பாடுகளுடன் மீள திறக்கப்பட்டிருந்தன.

பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பறைகளிலும் உள்ள மாணவர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்ததுடன், ஒரு வகுப்பறையில் இருக்கக்கூடிய மாணவர்களின் அளவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இதனால், பெருமளவான மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், பல பாடசாலைகள் குழு முறைமைக்கமையவே கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன.

எனினும், புதிய நடைமுறைக்கமைய விதிக்கப்பட்டிருந்த அனைத்து கட்டுப்பாடுகளும் நீக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 12 முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, நாளை (07) முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, நேற்று (05) அறிவித்தார்.

## ஊசி செலுத்தும்...

வரலாறு மற்றும் கடந்த கால கொரோனா தொற்று தொடர்பில் ஊசி செலுத்தும் ஊழியருக்கு தெரிவிக்க வேண்டும் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நேற்று (05) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

தங்கள் தடுப்பூசி அட்டைகளுடன் கிளினிக்குகளுக்குள் செல்லும் நோயாளிகள் பூஸ்டர் தடுப்பூசியை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறார்கள். அதேவேளை, கடந்த 6 மாதங்களுக்குள் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பூஸ்டர் டோஸ் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் இது தடுப்பூசியின் செயற்றிறன் மற்றும் இயற்கையான நோயெதிர்ப்பு சக்தியைக் குறைக்கிறது.

சிலர் தங்களுக்கு ஒருபோதும் கொரோனா இல்லை என்று வைத்தியர்கள் அல்லது தாதியர்களிடம் பொய் சொல்கிறார்கள். ஆனால் இதைச் செய்வதால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்று தெரிவித்தார்.

மேலும், சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோபார்ம் மற்றும் சினோவாக் தடுப்பூசிகள் கொரோனா வைரஸின் ஒமிக்ரான் மாறுபாட்டுக்கு எதிராக செயல்படவில்லை என்று வெளிநாட்டு ஊடகங்கள் வெளியாகிருக்கும் செய்திகளை டொக்டர் ஹேரத் மறுத்தார்.

## சந்தேகநபர்...

இதுதொடர்பில் பொரளை பொலிஸார், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

கல்முனை, பள்ளியவீதியை வசிப்பிடமாகக்கொண்ட 42 வயதான சல்லி மொஹமட் கலின் (சந்தேகநபர் இலக்கம் 1123) என, நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

திடீரென சுகயீனமடைந்த மேற்படி சந்தேகநபர், நவம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்றார். அதன்பின்னர், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு டிசெம்பர் 5ஆம் திகதியன்று மாற்றப்பட்ட அவர், தங்கியிருந்து சிகிச்சைப்பெற்றுவந்தார்.

இந்நிலையிலேயே, அவர் மரணமடைந்துள்ளார் என நீதிமன்றத்துக்கு அறிவுறுத்தப்பட்டது.

## குழம்பிய குட்டையில் மீன்...

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அரசாங்கத்துக்கு எதிராக செயற்பட்ட சுசில் பிரேமஜயந்த இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்படாவிட்டால், எதிர்காலத்தில் அரசாங்கத்திலிருக்கும் ஏனையோரும் தாங்கள் நினைப்பதுபோல பேசிகொண்டிருப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்து தெரிவித்துள்ளார். குழம்பிய குட்டையில் மைத்திரி மீன்பிடிக்கப் பார்க்கிறார் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பொதுத் தேர்தலின்போது தனித்துப் போட்டியிட்டிருந்தால் ஐக்கிய தேசிய கட்சிக்கு பொதுத்தேர்தலில் என்ன நடந்ததோ, அதுவே சுதந்திரக் கட்சிக்கும் நடந்திருக்கும் எனவும் தெரிவித்தார்.

## எதிர்கால திட்டங்கள் அவசியம்

கிண்ணியாவில் படகுப் பாதை விபத்தில் பாதிக்கபட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு, எதிர்க்கட்சி தலைவரால் நேற்று முன்தினம் (04) நிதியுதவி வழங்கப்பட்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், பல உயிர்களை காவுகொண்ட கிண்ணியா பாலத்தின் கட்டுமானப் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்பட்ட இடத்திலேயே இருப்பதாகத் தெரிவித்த அவர், இப்பாலமானது 20ஆவது திருத்தப் பாலம் என்று சுட்டிக்காட்டினார்.

இவ்வளவு உயிர்கள் காவுகொள்ளப்பட்டு, பலர் காயமடைந்து பலர் துயரமடைந்துள்ள நேரத்தில் கூட இன்னும் இதிலிருந்து விரைவாக பாலமொன்றை அமைக்க வேண்டும் என்ற பாடத்தை ஆட்சியாளர்கள் படிக்கவில்லை என்பது தனது கண்ணுக்கு தெரிகிறது என்றார்.

பாலத்தின் பணிகள் முன்னோக்கி செல்வதை எம்மால் அவதானிக்க முடியவில்லை எனத் தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ், இந்த பாலம் உரிய தரத்துடன் நிர்மாணிக்கப்பட்டு, இந்த பிரதேச மக்களிடம் வழங்குவோம் என்றும் உறுதியளித்தார்.

பொய் அடிக்கல், போலி அரசியல் நிகழ்வுகள் இல்லாமல் இந்த பாலத்தின் பணிகளை முன்னெடுப்போம் என தெரிவித்த அவர், 20 ஆவது திருத்தத்துக்கு கையை உயர்த்தியதால் அவர்களுக்கு கிடைத்த மகிழ்ச்சி தனிப்பட்டதாகவே அமைந்திருக்குமே தவிர, அந்த மகிழ்ச்சி கிண்ணியாவுக்கோ மூதூருக்கோ கிடைத்திருக்காது என்றார்.

## ராஜிதவுக்கும் ரொஷானுக்கும் கொரோனா தொற்று உறுதி

கடந்த சில தினங்களாக நெருங்கி பழகியவர்கள், தங்களை தாங்களாகவே சுய தனிமையில் ஈடுபடுத்திக்கொண்டுள்ளனர் என்று அறியமுடிகிறது. இதேவேளை இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்துக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டிருந்த நிலையில் தற்போது அவருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## மேலும் 6 மாதங்களுக்கு...

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின் பிரகாரம் செயற்பட்டே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டுவரும் புலனாய்வுகளைத் தொடரும் விதத்தில் 2022 ஜனவரி 05ஆம் திகதி பி.ப. 4.30 மணியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இந்த இடைநிறுத்தத்தை நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் இன்றுமுதல் இரவு...

இக்காலப்பகுதியில், பால், பத்திரிகை விநியோகம், மருத்துவமனைகள், மருந்தகங்கள், ஆம்புலன்ஸ், அமரர் ஊர்தி, ஏ.டி.எம். போன்ற அவசிய பணிகளுக்கு மட்டும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இரவு ஊரடங்கு நேரத்தில் (இரவு 10 மணிக்கு மேல்) கடைகள், உணவகங்கள், வணிக வளாகங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் செயல்பட அனுமதி இல்லையென தமிழக அரசு அறிவித்துள்ளது.

அனைத்துப் பள்ளிகளிலும், 1ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை நேரடி வகுப்புகள் நடத்தத் தடை விதிக்கப்படுகிறது. மழலையர் காப்பகங்கள் (Creche) தவிர, மழலையர் விளையாட்டுப் பள்ளிகள் (Play Schools), நர்சரிப் பள்ளிகள் (LKG, UKG) செயல்பட அனுமதி இல்லை என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

உற்பத்தி தொழிற்சாலைகள், IT சேவை உள்ளிட்ட நிறுவனங்கள் செயல்பட அனுமதி. பணிக்கு செல்லும் பணியாளர்கள் தொடர்புடைய நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும். IT நிறுவனங்கள் தங்களது பணியாளர்களுக்கு WFH ஏற்பாடு செய்ய வேண்டுமென தமிழக அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 7ஆவது மூளை செயற்படுகிறது



நாட்டு மக்களின் கைகளில் பணம் இருந்தாலும், வாங்குவதற்கு பொருள்கள் இல்லை எனத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி லால்காந்த, பசிலின் 7ஆவது மூளை தற்போதுதான் செயற்பட ஆரம்பித்துள்ளதாகவும் கேலி செய்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஒரு மாதத்துக்கு முன்புதான் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பித்திருந்தார். இவ்வாறான நிலையில் தற்போது பசில் நாட்டு மக்களுக்கு பணத்தை வழங்கி வருகிறார்கள். பசிலின் 7ஆவது மூளைக்கு தற்போதுதான் நாட்டு மக்களுக்கு பணத்தை வழங்க வேண்டும் என நினைவு வந்துள்ளது.

நாட்டு மக்களின் கைகளில் பணம் இருந்தாலும் வாங்குவதற்குப் பொருட்கள் இல்லை. வில்பரோக்களில் பணத்தைக் கொண்டு சென்று பொருட்களை வாங்க வேண்டிய நிலை ஏற்படும்.

அரசாங்கம் இன்னும் ஒரு வருடத்துக்கு ஆட்சியில் நீடித்தாலும் நாட்டின் சொத்துகள் அனைத்தும் விற்பனை செய்யப்பட்டுவிடும் என்றார்.

மூன்றிலிரண்டுக்காக

## தலைசாய்த்து கொண்டிருக்க முடியாது



மூன்றிலிரண்டு பெரும்பான்மை வேண்டும் என்பதற்காக, கூறும் எல்லா விடயங்களுக்கும் தலையை சாய்த்துக் கொண்டிருக்க முடியாதென இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் எடுக்கப்படும் கூட்டுத் தீர்மானங்களுக்கு இணங்கிவிட்டு வெளியில் சென்று அத்தீர்மானங்களை விமர்சிக்கிறவர்கள், அமைச்சரவையில் இருப்பதற்குப் பொறுத்தமற்றவர்கள்.

ஜனாதிபதி எடுக்கும் தீர்மானங்களுக்கு இணங்கிவிட்டு வெளியில் சென்று ஊடகங்கள் முன்பாக அவற்றை விமர்சிப்பது தவறு. அரசாங்கத்தின் நல்ல செயற்பாடுகளில் அரசாங்கத்தின் உறுப்பினராக இருந்துவிட்டு, மோசமான செயற்பாடுகளின்போது எதிர்க்கட்சியினராக மாறிவிடுவதாகவும் தெரிவித்தார்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை வேண்டும் என்பதற்காக கூறும் எல்லா விடயங்களுக்காகவும் தலைசாய்த்துக் கொண்டிருக்க முடியாது எனவும், மூன்றிலிரண்டு அல்லாது ஓர் ஆசனத்தை அதிகமாக வைத்துகொண்டு அரசாங்கத்தை நடத்திச் செல்ல முடியும் எனவும் தெரிவித்தார்.

## 18 மாடுகளுடன் மூவர் கைது

அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக மாடுகளை வவுனியாவில் இருந்து ஏற்றிவந்த மூவர் அளுத்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 18 மாடுகளை இவர்கள் சட்டவிரோதமாக லொறியில் ஏற்றிவந்தபோது, வெலிபிடிய பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மாடுகளை கொண்டுவந்த லொறியில் கன்றுகள் இருந்ததாகவும், இறைச்சிக்காகவே இந்த மாடுகளை வவுனியாவிலிருந்து சட்டவிரோதமாக அளுத்கமவுக்குக் கொண்டுவந்துள்ளதாவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மாடுகளை ஏற்றிவந்த லொறியை மடக்கிப் பிடிக்க பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவியையும் பெற்றுள்ளனர். இதேவேளை, இச்சம்பவம் தொடர்பில் வவுனியாவைச் சேர்ந்த இருவரும், தர்கா நகரைச் சேர்ந்தவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.





## நட்சத்திர ஹோட்டல்களில் விறகுகள்..

நாட்டில் ஏற்பட்டிருக்கும் காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டையடுத்து, கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் விறகு அடுப்புகளில் சமைப்பதை படங்களில் காணலாம்

படங்கள்: பிரதீப் பத்திரண





## பிரச்சினைகளை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளோம்'



தனியார் பஸ் உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், பஸ் கட்டணங்கள் அதிகரிப்பால் பல்வேறுப் பிரச்சினைகளுக்கு நாம் முகங்கொடுத்து வருகிறோம். குறிப்பாக ஆசனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பயணிகளை ஏற்றிச் செல்வதில் பாரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இதேவேளை, பல்வேறு காரணங்களுக்காக பஸ்களுக்குத் தண்டப்பணங்கள் அறிவிடுவதாலும் பஸ் உரிமையாளர்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

பஸ் உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது கூறினார்.

## எதிர்க்கட்சியால் ஜீரணிக்க முடியவில்லை



அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ள நிவாரணப் பொதியை எதிர்க்கட்சியால் ஜீரணிக்க முடியவில்லை என தெரிவித்த துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, இந்த அரசாங்கத்தை மக்கள் நிராகரிக்க வேண்டும் என்பதை எதிர்க்கட்சி விரும்புவதாகவும் எனினும், மக்களை மனதில் வைத்துக்கொண்டு அரசாங்கம் எதையாவது செய்யும் போது, அதனை விமர்சிக்கும் நிலை உருவாகியுள்ளது என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (5) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்த வருடம் நாம் எமது சவால்களை முறியடித்து வெற்றிக் காண்போமெனத் தெரிவித்த அவர், அந்தச் சவாலை வெற்றிக்கொள்ள அந்தப் பொறுப்பை நிதியமைச்சர் தெளிவாக நிறைவேற்றியுள்ளார் என்றார்.

எனவே, எதிர்கால பயணத்தை பொருளாதார ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்லக் கூடிய வேலைத்திட்டத்தை செயற்படுத்துவோம்.

இதேவேளை முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கப்பட்டமை தொடர்பில் பலரும் பல கருத்துகளைத் தெரிவித்தாலும் வரலாற்றில் சகல அரசாங்கங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இது ஒன்றும் புதிய விடயமல்ல; நாம் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி என்ற ரீதியில் அரசாங்கத்தை பாதுகாக்கும் பொறுப்பு எமக்குள்ளது.

அரசாங்கத்துக்குள்ளும் குழுக்களுக்குள்ளும் தமது எண்ணங்களை வெளிப்படுத்த முடியும். ஆனால், இவர்கள் சந்திக்கும் போது கசாயம் குடித்த ஊமை போல இருப்பது தான் பிரச்சினை. ஆனால் ஒலிவாங்கி கிடைத்தவடன் கதைக்கின்றனர்.

அரசாங்கத்துக்குள் இருக்கும் கட்சிக்கு இருக்கும் பொறுப்பு என்னவென்பது தெளிவாக உள்ளது. நமது கூட்டுப்பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு நாம் அனைவருக்கும் உள்ளது. அதனை நாம் நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்றார்.

இரு கொலைகள், ஐந்து கொள்ளை;

## 23 நாள்களுக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட திருடன்

பொரளையில் உள்ள தங்க நகைக் கடையில் துப்பாக்கிச்சூடு நடத்தி, தங்க நகைகளைக் கொள்ளையிட்ட பிரதான சந்தேகநபரை 23 நாள்களுக்குப் பின்னர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் 11ஆம் திகதி பொரளையில் துப்பாக்கிகளுடன் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், நகைக் கடைக்குள் சென்று துப்பாக்கி சூடுநடத்தி அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி தங்க நகைகளைக் கொள்ளையிட்டு சென்றிருந்தனர். இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், குருவிட்டவை சேர்ந்த 45 வயதானவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தி தங்க நகைக் கடைகளில் கொள்ளையிட்டமை, இருவரை கொலை செய்தமை உள்ளிட்ட 5 குற்றச் செயல்களில் அவருக்கு தொடர்பிருப்பது தெரியவந்துள்ளது. இதேவேளை சந்தேக நபரிடமிருந்து கொள்ளைச் சம்பவங்களுக்குப் பயன்படுத்தப்படும் மோட்டார் சைக்கிள், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, தங்க நகைகள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

## தமிழர்களிடத்தில் பகிரங்க மன்னிப்புக கேட்டால் அரைவாசிப் பிரச்சினை தீரும்



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடம் அடி மட்டத்துக்கு இறங்கி பகிரங்கமாக, தேசிய ரீதியில் மண்ணிப்புக் கோரினாலேயே எமது நாட்டின் அரைவாசிப் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமென யுத்தம் முடிவடைந்த காலகட்டத்தில் மீள் புனர்வாழ்வு மற்றும் அத்தியவசிய சேவை ஆணையாளராக இருந்த எஸ்.பி.திவாரத்ன தெரிவித்துள்ளார்.

அறிக்கைகளை கேட்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்தோன்றி சாட்சியமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து சாட்சியமளிக்கையில், தமிழ், முஸ்லிம் மக்கள் நல்லவர்கள்; எனது 40 வருட கால அரச சேவையில் அவர்களோடு இணைந்து சிறப்பாக சேவையாற்றியுள்ளேன். கொடுத்த ஒரு விடயத்தினை அவர்கள் சிறப்பாக செய்து தருவார்கள்.

இன்றும் தெற்கில் உள்ள அரச அதிகாரிகள் தனிச் சிங்களத்திலேயே வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு அலுவலக கடிதங்களை அனுப்புகின்றார்கள். இம்மொழிப்பிரச்சினைக்கு அரச மட்டத்தில் இருந்து கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## பிரியந்தவின் குடும்பத்துக்கு 25 இலட்ச ரூபாய்



பாகிஸ்தானில், அடிப்படைவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட இலங்கை பொறியியலாளரான பிரியந்த குமாரவின் குடும்பத்தினருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஊடாக, தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, 25 இலட்சம் ரூபாய் நிதியுதவியை வழங்கியுள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை பெற்று கடந்த காலங்களில் அதிகளவானவர்கள் இலங்கையிலிருந்து சென்றுள்ளனர். இவர்களில் பலர் முகவர்கள் ஊடாக சென்றுள்ளனர். எவ்வாறாயினும் உள்நாட்டில் டொலரின் பெறுமதி 203 ரூபாயாக இருப்பதால் வெளிநாடுகளில் இருந்து பலர் பணத்தை அனுப்புவதில்லை. எனவே வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்புவர்களுக்காக டொலருக்கு 240 ரூபாய் செலுத்தப்பட வேண்டுமென, அரசாங்கத்துக்கு ஆலோசனை முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு செய்வதால் மாத்திரமே நாம் எதிர்பார்த்தது நடக்குமெனத் தெரிவித்த அமைச்சர், இல்லை என்றால் 06 இலட்சம் பேரை வெளிநாடுகளுக்கு அனுப்பியும் பிரயோசனமில்லை.

தமிழ்த் தேசத்தை இந்தியா அங்கிகரிக்கா விட்டால்

# மக்கள் புரட்சி வெடிக்கும்

வா.கிருஸ்ணா, கனகராசா சரவணன்

“வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டு ஒரு தமிழ்த் தேசத்தை அங்கிகரிக்கும் முகமாக இந்தியா தனது அரசியல் நடவடிக்கையை எடுக்கவேண்டும். அதை விடுத்து, தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தூக்கிக் கொண்டு சீனாவைத் தடுக்கும் முகமாக, நீ முகவர்களைப் பாவித்து, பல கூட்டுகளையும் பல ஒப்பந்தங்களையும் செய்து, அதன் மூலம் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற நடவடிக்கையை உடனடியாக நிறுத்தவேண்டும். அல்லது மக்கள் புரட்சி வெடிக்கும்” என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அரசடி பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட காரியலயத்தில் நேற்று இடம்பெற்ற அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் 22ஆவது நினைவேந்தல் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றிய



போது சுரேஷ் இவ்வாறு தெரிவித்தார்.

சுரேஷ் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், “இங்கே சீனா கால் ஊன்றி இருக்கின்றது. சீனாவைத் தடுக்கும் முகமாக இந்தியா தங்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு பல கூட்டுகளையும் பல அரசியல் தலைவர்களையும் தங்களுக்கு ஏற்ற மாதிரி பாவித்து, ஒட்டு மொத்த தமிழ் மக்களின் நலனை பாதிக்கின்ற வகையில் அவர்கள் செயற்படுகின்றார்கள்.

எனவே உங்களுடைய முகவர்களை பாவித்து பல கூட்டுகளையும் பல ஒப்பந்தங்களையும் செய்து, நீங்கள் மக்களை ஏமாற்றுகின்ற பகற்கனவை உடனடியாக நிறுத்த வேண்டும்.

எங்களுடைய மக்களின் நியாயமான போராட்டத்தை கருத்தில் கொள்ளாவிட்டால் நிச்சயமாக உங்களுடைய நாட்டிற்கு சீனா அல்ல தெற்காசியாவிலுள்ள பல நாடுகள் உங்களை குறிவைக்கும்.

இந்த நாடு உண்மையிலே சீனாவின் கடன் எல்லைக்குள் அகப்பட்டிருக்கின்றது, சீனா வடக்கு, கிழக்கில் கால் ஊன்ற எத்தனிக்கின்றது. நாங்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்ல; இந்தியாவின் செல்ல பிள்ளைகளாக நாங்கள் யோசிக்கின்றோம். ஆனால் நீங்கள் அவ்வாறு இல்லை; நீங்கள் எங்களை பகடைக்காயாகவும் அடிமைகளாகவும் பாவிக்க எத்தனிக்கின்றீர்கள்” எனக் கூறினார்.

800 கிலோ கிராம் குண்டுகள் கடத்தல்

# அறுவர் கைது

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணியில் கைவிடப்பட்ட பாரிய இரண்டு வெடிகுண்டுகளை இரும்புக்காக கடத்திச் செல்லமுற்பட்ட 6 பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளார்கள்.

ஜனவரி 4ஆம் திகதியன்று விடுவிக்கப்பட்ட காணியில், வேலி அமைப்பதற்காக, அன்றைய தினமே சென்றிருந்த நபர், பாரிய குண்டுகளைக் கண்டுள்ளார்.



அதுதொடர்பில் தன்னுடைய சகாக்களுக்கு அறிவித்துள்ளார்.

இந்நிலையில், அவ்விரு பாரிய குண்டுகளையும் இரும்புக்காக விற்பனை செய்வதற்கு எடுத்துச் செல்ல முற்பட்ட போதே கைவேலி பகுதியைச் சேர்ந்த, அறுவர் கைது செய்யப்பட்டனர். ஒவ்வொன்றும் சுமார் 400 கிலோ கிராம் நிறை கொண்டவை.



கைது செய்யப்பட்ட அறுவரையும் மாங்குளம் மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக புதுக்குடியிப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

# 50 கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து பொதி

யது பாஸ்கரன்

கிளிநொச்சி, கிராஞ்சி, பொன்னவெளி ஆகிய கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கர்ப்பிணிகள் 50 பேருக்கு 663 ஆவது பிரிகேட் சிப்பாய்களால் ஊட்டச்சத்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

திருமதி லசந்திகா குமாரி அங்கும்புர மற்றும் இலங்கை தேசிய பாதுகாப்புப் படையணியின் கெப்டன் என்.எ.எச்.ஐ மதுமதாவ ஆகியோரின் அனுசரனையில், இவை வழங்கப்பட்டன. இந்நிகழ்வு, கிராஞ்சி சனசமூக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், 663 வது பிரிகேட் தளபதி பிரிகேடியர் பிரியஞ்சித் ஹென்னாடிகே பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இந்தப் பொதிகள் தலா 4,000 ரூபாய் பெறுமதியான உணவு வகைகள், நுளம்பு வலைகள், குழந்தைக்குத் தேவையான பொருட்கள் மற்றும் இதர பொருட்களும் இருந்தன.









# இ.போ.ச பஸ் மீது தாக்குதல்; ஒருவர் கைது

என்.ராஜ், எஸ் தில்லைநாதன்

யாழ்ப்பாணம் - கொழும்புக்கு இடையில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் மீது தாக்குதலை மேற்கொண்டு, சாரதி மற்றும் நடந்துநர் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி பஸ் நிலையத்தில் கடந்த (04) செவ்வாய்க்கிழமை இரவு குறித்த பஸ்ஸை, இடைமறித்த கும்பலொன்று பஸ்ஸின் மீது தாக்குதலை மேற்கொண்டதுடன், சாரதி மற்றும் நடத்துநர் மீதும் தாக்குதல் மேற்கொண்டது. அதில், காயமடைந்த சாரதி மற்றும் நடத்துநர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நெல்லியடி பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், ஏனைய நபர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை , பருத்தித்துறை - திருகோணமலைக்கு இடையில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸின் மீது , நெல்லியடி புறாப்பொறுக்கி சந்தி பகுதியில் வைத்து இனம் தெரியாத கும்பல் கல் வீச்சு தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

நேற்று (04) புதன் கிழமை அதிகாலை 3.45 மணியளவில் இடம்பெற்ற குறித்த தாக்குதல் சம்பவத்தில் பஸ்ஸின் முன்பக்க கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

# மக்கள் காங்கிரஸ் ஆவணத்தில் கையெழுத்திடாது

நூருல் ஹுதா உமர்

தமிழ் அரசியல் கட்சிகள் இந்தியப்பிரதமருக்கு அனுப்ப தயாரிக்கும் ஆவணங்களில் கிழக்கு மக்களுக்கு சந்தேகம் இருப்பதாகவும், அந்த ஆவணத்தில் முஸ்லிங்களுக்கு ஒழுங்கான தீர்வு திட்டம் இல்லாமல் இருப்பதாகவும் கூறி, அந்த ஆவணத்தை பகிரங்கப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்து அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ‘கிழக்கு கேடயம்’ ஊடக மாநாட்டை நேற்று முன்தினம் (04) கல்முனையில் நடத்தினர்.

அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போது, “தமிழ்க் கட்சிகள் சில இணைந்து இந்தியப் பிரதமருக்கு அனுப்பவுள்ள கடிதம் ஏன் அனுப்பப்படுகின்றது? அந்தக் கடிதத்தில் உள்ள விடயங்கள் என்ன என்பது தொடர்பில் வடக்கு, கிழக்கில் உள்ள பொதுமக்கள் குழப்பத்தில் இருக்கிறார்கள். அதனை தெளிவுபடுத்த வேண்டியது இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள இரா. சம்பந்தன், எம்.ஏ. சுமந்திரன் உட்பட முஸ்லிம்களை பிரதிநித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களுக்கு பெரிய பங்குள்ளது.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் முஸ்லிங்களின் அபிலாஷைகள் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டன என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். ஒளித்து மறைத்து செய்யப்படும் இந்த ஆவணத்தில் கூட, முஸ்லிங்களின் இருப்புக்கு ஆபத்தான விடயங்கள் உள்ளதாக நாங்கள் நம்புகிறோம். இந்தக் கடிதத்தில் உள்ள விடயங்கள் தொடர்பில் மக்களின் பிரதிநிதிகளுக்கோ அல்லது சமூகத் தலைவர்களுக்கோ தெளிவுபடுத்தப்படவில்லை என்பது மிகப்பெரிய அச்சத்தை உண்டாக்கியுள்ளது.

இது தொடர்பில் பூரண விளக்கம் தராமல், எங்களுக்கு விளங்கப்படுத்தாமல் இந்த ஆவண நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த ஆவணத்தில் கையெழுத்திட்டால் கிழக்கில் வாழும் முஸ்லிம், தமிழ், சிங்கள மக்களை ஒன்றுதிரட்டி, அவர்களுடன் இணைந்ததாக மக்கள் பிரதிநிதிகளையும் ஒன்றாக வரவழைத்து, எந்த நாடுகளுக்கு எல்லாம் இந்த ஆவணம் செல்கிறதோ அந்த நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மக்கள் பேரணியை நடத்தி, இந்த ஒப்பந்தத்தை மக்கள் நிராகரிப்பதாக பகிரங்கமாக அறிவிக்கும் தேவை வந்துவிடும் என்பதை இதில் சம்பந்தப்பட்டுள்ள தலைமைகளுக்கு தெரிவித்து கொள்கிறோம்” என அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவரும் மாநகர சபை உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் இந்த ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

இங்கு கருத்து வெளியிட்ட கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.எச்.எம். அப்துல் மனாப், “கடந்த 2021.12.23 அன்று நடந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட கூட்டத்தில், இந்த ஆவணத்தை ஆதரித்து மக்கள் காங்கிரஸ் கையெழுத்திடுவதில்லை என்று தீர்மானித்துள்ளோம்” எனக் கூறினார்.



நிரம்பி வழியும் குளங்கள்:

# வீதியை ஊடறுக்கும் வெள்ளம்

## முதலைகளும் ஊடுருவல்

வ. சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வந்த மழையானது நேற்று (05) காலையிலிருந்து சற்று குறைவடைந்துள்ளது. எனினும் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான சிறிய குளங்கள் அனைத்தும் நிரம்பி வழிவதையும் பெரிய குளங்கள் நிரம்பியுள்ள நிலையில் அவற்றின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதையும் சில வீதிகளை ஊடறுத்து வெள்ள நீர் பாய்வதையும் அவதானிக்க முடிகின்றது.

**“ குளங்கள் நிரம்பி வழிந்து நேரடியாக மட்டக்களப்பு வாவியைச் சென்றடைவதனால் வாவியிலிருந்து முதலைகளும் குளங்களை நேக்கி வருகின்றன. இவ்வாறு வரும் முதலைகள் கிராமங்களுக்குள்ளும் உட்புகும் சாத்தியங்கள் அதிகம் காணப்படுகின்றன**

அந்த வகையில் மாவட்டத்தின் வெல்லாவெளி, கோவில்போரதீவு, பழுகாமம், பொறுகாமம், பெரியபோரதீவு, கொக்கட்டிச்சோலை, எருவில், களுவாஞ்சிகுடி, குருமண்வெளி, களுதாவளை, தேத்தாத்தீவு உள்ளிட்ட பல இடங்களிலுள்ள சிறிய குளங்கள் நிரம்பி வழிவதை அவதானிக்க முடிகின்றது.

குளங்கள் நிரம்பி வழிந்து நேரடியாக மட்டக்களப்பு வாவியைச் சென்றடைவதனால் வாவியிலிருந்து முதலைகளும் குளங்களை நேக்கி வருகின்றன. இவ்வாறு வரும் முதலைகள் கிராமங்களுக்குள்ளும் உட்புகும் சாத்தியங்கள் அதிகம் காணப்படுவதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



# மாடு முட்டியதில் முதியவர் மரணம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், தீவகம் பகுதியில் வளர்ப்பு மாடு முட்டி, படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தை சேர்ந்த, மண்கும்பான் பிள்ளையார் ஆலய காவலாளியான நல்லையா கணேஸ்வரன் (வயது 62) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 29ஆம் திகதி பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமான மாட்டை, கட்ட முற்பட்ட போது, அவரை மாடு வயிற்றுப்பகுதியில் முட்டியுள்ளது. மாட்டின் கொம்புகள் குத்தி அவர் படுகாயமடைந்திருந்தார்.

அதனையடுத்து யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, 5 நாள்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

**“ மண்கும்பான் பிள்ளையார் ஆலய காவலாளி, கோவில் மாட்டைக் கட்ட முற்பட்டபோது, மாடு வயிற்றுப் பகுதியில் முட்டி அவர் படுகாயமடைந்தார். யாழ்.போதனா வைத்திய சாலையில் 5 நாள்களாக சிகிச்சை பெற்ற நிலையில் உயிரிழந்துள்ளார்**

# கடன்கழிக்க சென்ற மூதாட்டியிடம் அபகரிப்பு

செந்தூரன் பிரதீபன்

காலைக் கடனைக் கழிப்பதற்காக, அதிகாலை 3 மணியளவில் சென்றிருந்த மூதாட்டியின் தங்கச்சங்கிலி அபகரிக்கப்பட்ட சம்பவமொன்று, நேற்றுமுன்தினம் (04) பதிவாகியிருந்ததென அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம், அச்சுவேலி செல்வநாயகபுரம் பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது. சுமார் இண்டு பவுண் தங்க சங்கிலியையே கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர் என முறைபாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அச்சுவேலி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மலையக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த

# நிலையானதொரு பொருளாதாரத் திட்டம் அவசியம்

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு

எஸ்.கணேசன்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரண விலையில் கோதுமை மா வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள முடிவை நாம் வரவேற்கின்றோம் எனத் தெரிவித்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நிலையானதொரு பொருளாதாரத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (4) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள, கோதுமை மா நிவாரணத்தை நாம் வரவேற்கின்றோம்.

நாட்டின் தற்போதைய நிலையில் நாட்டு மக்களுக்கு நிவாரணம் தேவைப்படுகின்றது. அதேபோல இடம்பெற்றுள்ள சிற்சில தவறுகளுக்கு ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் கூட்டுப் பொறுப்பை ஏற்கவேண்டும்.

அதனைவிடுத்து தனிநபர்மீது பழியை சுமத்த முற்படுவது தவறு. மக்களுக்கு சேவை செய்யவே பதவி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மக்களுக்கு அதனை வழங்குவதற்கே முற்பட வேண்டும். மாறாக, குறைகூறுவதற்காக மட்டும் மக்கள் எம்மை பாராளுமன்றம் அனுப்பவில்லை.

கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் விரைவில் உயர்நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கும் என எதிர்ப்பார்க்கின்றோம். அதுவரை பொறுமையாக இருப்போம். கூட்டு ஒப்பந்தம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

பெருந்தோட்டத் தொழிலில் ஈடுபடுவர்கள் அரச ஊழியர்கள் என சில நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு அல்ல. தனியார் நிறுவனங்களின் கீழ்தான் அவர்கள் பணியாற்றுகின்றனர். எனவே, கம்பனிகள்தான் நிவாரணம் வழங்க வேண்டும். தொழிலாளர்களை சுரண்டும் நிறுவனங்கள் அதனை வழங்குமா என தெரியாது என்றார்.

ஜீவனால் நிதி ஒதுக்கப்பட்ட

# செய்தி பொய்

## வைத்தியசாலை நிர்வாகம் தெளிவுபடுத்தியது

எஸ். சதீஸ்

டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஆரம்ப சிகிச்சைப் பிரிவுக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானால் 22 இட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என வெளிவரும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என, வைத்தியசாலையின் உதவி வைத்திய அதிகாரி ஜே.அருள்குமரன் தெரிவித்துள்ளார்.

டிக்கோயாவில் நேற்று முன்தினம் (4) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், குறித்த வேலைத்திட்டத்தை நாம் எமது வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி, தரிந்த பி. வீரசிங்க தலைமையில் ஆரம்பித்தோம் எனத் தெரிவித்த அவர், எமது வைத்திய அதிகாரியின் பணிப்புரைக்கமைய, மக்களுக்கு இந்தச் செய்தி சென்றடைய வேண்டுமென்ற நோக்கில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நோர்வூட் பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்டவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தோம்.

தவிர்க்கமுடியாத காரணத்தினால் இராஜாங்க அமைச்சர் வருகை தர முடியாமல் போனதால், நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்டவர்கள் வருகைத் தந்திருந்தனர்.

இந்த வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரியாக பொறுப்பேற்ற நாள்முதல் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பலதரப்பட்ட உதவிகளை செய்துகொடுத்துள்ளார்.

எனினும், ஆரம்ப சிகிச்சைப் பிரிவுக்கான நிதியை நாம் யாரிடமும் பெற்று கொள்ளவும் இல்லை. பெற்று கொள்ள வேண்டிய தேவையும் இல்லை என்றார்.









## ‘ஸ்மார்ட் போர்ட்’ தொகுதி கையளிப்பு...

இறக்குவானை பரி. யோவான் தமிழ் தேசிய கல்லூரிக்கு, இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பால் ‘ஸ்மார்ட் போர்ட்’ தொகுதி உபகரணங்கள் கையளிக்கப்பட்டதுடன், கௌரவிப்பு நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்நிகழ்வில், கல்லூரி அதிபர் பி. கமலேஸ்வரன், உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ஆர். ரமேஸ்வரன், ஆலோசகர் டொக்டர் எஸ். கருணாகரன், செயலாளர் எஸ். தயாளன், பொருளாளர் ஆர். அஜித்குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (படம்: எம். செல்வராஜா)

மண்சரிவால்

# போக்குவரத்து தடை

ஆ.ரமேஸ்

கந்தப்பளை- கோணப்பிட்டிய வீதியுடனான போக்குவரத்து நேற்று (05) காலை முதல் முற்றாக தடைசெய்யப்பட்டது.

கோணப்பிட்டிய- கல்கந்தை எனுமிடத்தில் நேற்று (5) அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்ற மண்சரிவு காரணமாக, இந்த வீதியுடனான போக்குவரத்து தடைசெய்யப்பட்டது.

இந்த நிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்று, வீதியில் சரிந்துள்ள மண் மற்றும் கற்களை அகற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.



பாடசாலைக்கு அருகில் நீதிமன்ற தொகுதி அமைப்பதற்கு

# பழைய மாணவர் சங்கம் எதிர்ப்பு

மஹேஸ் கீர்த்திரத்ன

நீதிமன்ற தொகுதியை, மாத்தளை விஜய வித்தியாலயத்துக்கு அருகில் அமைக்கும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தி, எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக மாத்தளை விஜய பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில், மக்களைத் தெளிவுப்படுத்துவதற்கான துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் உள்ளிட்ட பல எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த மாதம் 10ஆம் திகதி, இந்தக் கட்டுமானப் பணிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பாடசாலைக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என, விஜய பாடசாலை பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தால், இந்தக் கட்டுமானப் பணிகளை நிறுத்துவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டாலும் அந்தப் பணிகள் நிறுத்தப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே பாடசாலைக்கு அருகில் நீதிமன்ற தொகுதி அமைக்கப்படுமாயின் அது, மாணவர்களுக்கு பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

# சாரதிகள் சண்டையில் ஒருவருக்கு காயம்

எம். செல்வராஜா

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதி ஒருவருக்கும் தனியார் பஸ் சாரதி ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், இ.போ.ச பஸ் சாரதி கடுங்காயங்களுக்குள்ளாகி ஹல்துமுல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட தனியார் பஸ் சாரதி, சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதால், சாரதியையும் நடத்துநரையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக ஹல்துமுல்லை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இரண்டு பஸ்களும் போட்டி போட்டுக்கொண்டு பயணிகளை ஏற்றிச் சென்ற சந்தர்ப்பத்திலேயே, இரண்டு சாரதிகளுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளதுடன், தனியார் பஸ் சாரதியும் நடத்துநரும் இணைந்து, இ.போ.ச பஸ் சாரதியை பஸ்ஸிலிருந்து வெளியில் இழுத்து கடுமையாக தாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

சித்திவிநாயகர் கோவில் கும்பாபிஷேகம்

# திட்டமிட்டப்படி நடைபெறும்

## கோவில் நிர்வாகம் உறுதி

டி.ஷங்கீதன்

எத்தனை இடையூறுகள் வந்தாலும், திட்டமிட்டபடி அக்கரபத்தனை சித்திவிநாயகர் கோவில் கும்பாபிஷேகம் நடைபெறும் என, கோவில் நிர்வாக சபையின் செயலாளர் சுப்பிரமணியம் பாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

இந்த மாதம் 23ஆம் திகதி கோவில் கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு, தேவையான ஏற்பாடுகளை செய்து வந்த நிலையில், இந்த மாதம் 2ஆம் திகதி இனந்தெரியாதோரால், கோவிலின் சிற்பங்களும் சிலைகளும் சேதமாக்கப்பட்டன.

> கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு, தேவையான ஏற்பாடுகளை செய்து வந்த நிலையில், இந்த மாதம் 2ஆம் திகதி இனந்தெரியாதோரால், கோவிலின் சிற்பங்களும் சிலைகளும் சேதமாக்கப்பட்டன

எனவே இவ்வாறான சம்பவங்கள் மூலம் கோவில் கும்பாபிஷேகத்தை தடுத்து நிறுத்த முடியும் என எவராவது நினைத்திருந்தால், அது அவர்களின் அறியாமை என தெரிவித்துள்ள, கோவில் நிர்வாக சபையின் செயலாளர் திட்டமிட்டபடி எதிர்வரும் 19 ஆம் திகதி பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டு, 23 ஆம் திகதி கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு கோவில் நிர்வாக சபை தீர்மானித்திருக்கின்றது என்றார்.

அனர்த்த நிலைமைகளில் தகவல் பரிமாற்றத்துக்காக

# ஆறு தொலைபேசிகள் கையளிக்கப்பட்டன

அஜித்லால் சாந்தஉதய

மண்சரிவு, வெள்ளப்பெருக்கு போன்ற திடீர் அனர்த்தங்களின் போது, தகவல்களைப் பரிமாற்றுவதற்காக, சேவ் த சில்ரன் நிறுவனத்தால், 6 தொலைபேசிகள், இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலினி லொக்குபோத்தாகமவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அந்த அமைப்பின் இரத்தினபுரி மாவட்ட முகாமையாளர் நளிந்த கருணாரத்னவால் இந்தத் தொலைபேசிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற தொலைபேசிகளில் இரண்டு, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய நான்கும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கும் இரத்தனபுரி பொலிஸ் நிலையத்துக்கும் கையளிக்கப்பட்டுள்ளன.



அரசாங்கமும் முதலாளிமார் சம்மேளனமும்

# கூட்டிணைந்து நாடகமாடுகின்றனர்

பி.கேதீஸ்

அதிகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் சம்பளம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு முழுமையாக கிடைக்கவில்லை என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரியும் எனத் தெரிவித்த மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர். இராஜாராம், அரசாங்கமும் முதலாளிமார் சம்மேளனமும் இணைந்து இந்த விடயத்தில் நாடகமாடுகின்றனர் என்றார்.

நுவரெலியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே

> மலையகத்தின் விடுதலையாக இருக்கட்டும் அல்லது புரட்சியாக இருக்கட்டும் அது தொழிற்சங்கம் மூலமே ஆரம்பமாகியுள்ளது. கடந்த கால வரலாறுகளை பார்த்தால் தொழிலாளர்கள் உயிர் தியாகம் செய்து தோட்டங்களையும் தொழிற்சங்கங்களையும் தொழிலாளர்களையும் பாதுகாத்துள்ளார்கள்



அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

> உயிர் தியாகம் செய்து பாதுகாத்த தொழிற்சங்கங்களை தோட்ட நிர்வாகங்களும் அரசாங்கமும் தொழிற்சங்கங்களை இல்லாமல் செய்வதற்கு முயற்சி செய்கின்றார்கள். அதற்கு தொழிலாளர்கள் இடமளிக்க கூடாது

மலையகத்தின் விடுதலையாக இருக்கட்டும் அல்லது புரட்சியாக இருக்கட்டும் அது தொழிற்சங்கம் மூலமே ஆரம்பமாகியுள்ளது. கடந்த கால வரலாறுகளை பார்த்தால் தொழிலாளர்கள் உயிர் தியாகம் செய்து தோட்டங்களையும் தொழிற்சங்கங்களையும் தொழிலாளர்களையும் பாதுகாத்துள்ளார்கள்.

அவ்வாறு உயிர் தியாகம் செய்து பாதுகாத்த தொழிற்சங்கங்களை தோட்ட நிர்வாகங்களும் அரசாங்கமும் தொழிற்சங்கங்களை இல்லாமல் செய்வதற்கு முயற்சி செய்கின்றார்கள். அதற்கு தொழிலாளர்கள் இடமளிக்க கூடாது என்றார்.

# குரூர குணங்களில் இருப்போரை மீட்டெடுக்க வழிசமைப்போம்

அண்மைய காலங்களில் கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்வுகள், தாக்குதல்கள் சம்பவங்கள் மலிந்துள்ளன. கொரோனா தொற்றில், நாடு முடக்கப்பட்டிருந்த காலங்களில் வீட்டு வன்முறைகள் அதிகரித்திருந்தன. தற்போதைய நிலையில், வாய்த்தர்க்கங்கள் கொலையில் கொண்டுபோய் விட்டுவிடுகின்றன.

சில சம்பவங்களில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் மாணவர்களாக இருக்கின்றனர். பாலியல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் தந்தை, சகோதரன், மாமா என சொந்த உறவுகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'ஒருவரை மற்றவர் சீண்டக்கூடாது' என்பதை வீடுகளிலிருந்து கற்பிக்க ஆரம்பிக்க வேண்டும். எனினும், வீட்டு வன்முறைகளையே எப்போதும் பார்த்துப் பழகிபோன ஒருசில குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள், எதற்கெடுத்தாலும் அடிதடியில் இறங்கிவிடுகின்றனர். அதுவே இரத்தக் களரிக்கு வித்திட்டு, இறுதியில் கம்பி எண்ண வைத்துவிடுகின்றது.

வெல்லம்பிட்டியைச் சேர்ந்த 17 வயதான அப்துல் லத்தீப் என்ற இளைஞன், 'டிக் டொக்' சமூக ஊடகத்தால் ஏற்பட்ட மோதலில் குத்திக்கொலை செய்யப்பட்டார். இதில், பாடசாலை மாணவர்கள் உட்பட அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வீடுகளிலும் பாடசாலைகளிலும் வெற்றி, தோல்விகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும். வெற்றிப்படிகளில் ஏறிக்கொண்டே செல்லும் ஒருவருக்கு, தோல்வியைத் தாங்கிக்கொள்வதற்கான மனநிலை இருக்காது. அதுமட்டுமன்றி, பொறாமை, குதர்க்கமாகப் பேசுதல் போன்றவை எல்லாம் கூடாதென சொல்லிக்கொடுக்க வேண்டும். அதனூடாகவே, மாணவப் பருவத்தில் சரியாக வழிகாட்ட முடியும்.

அதைவிடவும், நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும்போது, சிறுவர்களாக இருக்கும் மாணவர்களை எப்போதும்,பெற்றோர் தங்களுடைய கண்காணிப்பின் கீழ் வைத்துக்கொள்ளவேண்டும். இல்லையேல், தவறான பாதையைத் தேர்ந்தெடுப்பதற்கு, தாங்களே குழிவெட்டி விட்டதாய் அமைந்துவிடும்.

நல்லவை எவை, கெட்டவை எவை என்பவற்றையெல்லாம், ஆரம்பத்திலிருந்தே சொல்லிக்கொடுக்க வேண்டும். ஒவ்வொருவரிடத்திலும் குரூரமான குணங்கள் இருக்கவேசெய்யும். அவற்றை இனங்காண வேண்டும். இல்லையேல், இளம் வயதுகளிலேயே இரத்தக்களரியை ஏற்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்லும்.

இது அக்குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் நல்லதல்ல. எடை குறைந்த சிறுவர்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்டுள்ளதைப் போல, சிறுவர் குற்றவாளிகள் மலிந்திருக்கும் பட்டியலிலும் நமது நாட்டின் பெயர் உள்ளீர்க்கப்பட்டுவிடலாம்.

மாணவப் பருவங்களில் இருப்போருக்கு எப்போதும் துருதுருவென இருக்கும் வகையில் ஏதாவது வேலைகளை கொடுக்கவேண்டும். படி,படியென்றால் சிலருக்கு கோபம் மூக்குக்கு மேலே வந்துவிடும். ஆகையால், கற்றலிலும் ஏனைய செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்கான ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். இவற்றுக்கெல்லாம் அப்பால், அவர்களின் நண்பர்கள், சுற்றியிருப்போர், தொடர்பில் அவதானத்துடன் இருக்கவே வேண்டும்.

எவ்விதமான செயல்களிலும் இறங்காதவர்கள், தீய செயற்பாடுகளின் சீக்கிரமாக இறங்கிவிடுவர் அல்லது தொற்றிக்கொள்வர்; ஆகையல், வயதை அறிந்து நல்வழியில் பயணிப்பதற்கு வழிகாட்டுதல் முக்கியமாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

அறியாமையே தங்களுக்கான அறிவு என எண்ணிக்கொள்ளும் நபர்கள், தங்களது செயல், பேச்சு ஆகியவற்றில் விட்டுக்கொடுப்பதில்லை. உண்மையைச் சொன்னாலும் புரியாமல் இருக்கும் சிலர், உலக அனுபவங்கள், கல்வியில் நாட்டம் இல்லாதவர்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள். இத்தகையவர்களுடன் வாதாடவும் முடியாது.

அறியாமை என்பது மிகப்பெரும் தவறு அல்ல; அநேகர் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்பதுபோல, காட்டிக் கொண்டிருப்பது சாதாரண விடயம். எதையும் ஒத்துக்கொள்ளாதவர்களிடம் கத்திப்பேசி, சரியான கருத்தைச் சொல்லிவிட முடியாது. புத்திமதிகளை வலிந்து புகுத்தவும் முடியாது. உணர்வுபூர்வமாக ஆர்வமுள்ளவர்களே கற்றலின் பெருமையை முதன்மைப்படுத்துகின்றார்கள்.

பாமரர்களின் அனுபவ ஞானம்கூட, கல்வியின் ஓர் அங்கம்தான். எனவே, எந்த வடிவில் மனிதர்களைக் கண்டாலும், அவர்களின் புறஉருவைத் தேடாதீர். எல்லாருக்குள்ளும் ஏதோ ஒரு திறமை ஒளிந்திருக்கும். தனக்கே எல்லாம் தெரியும் என எண்ணுவதும் அறியாமை. மனிதனை மனிதன் நேசிக்க வேண்டும். ஏற்றுக்கொள்வோம் அனைவரையும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

சுசிலின் பதவி நீக்கம் உணர்த்துவது?

# இலங்கை அரசியலின் அடுத்த கட்டங்களைத் தீர்மானிக்கும் 'குத்து வெட்டுகள்'



புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, கல்வி இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த சுசில் பிரேமஜயந்தவை, செவ்வாய்க்கிழமை (04/01) பதவி நீக்கினார்.

சில தினங்களுக்கு முன்னர், சந்தைக்குச் சென்ற சுசில் பிரேமஜயந்த, பொருட்களின் விலை உயர்வு தொடர்பில், ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது, அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சித்திருந்தார். அதைக் காரணம் காட்டியே, அவர் பதவி நீக்கப்பட்டிருக்கிறார்.

சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக் காலத்தில் ரவூப் ஹக்கீமும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் அநுர பண்டாரநாயக்கவும் ஜனாதிபதிக்கான நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறி, அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சித்தார்கள் என்கிற விடயமே, அப்போதும் பதவி நீக்கங்களுக்கான காரணமாக சொல்லப்பட்டிருக்கின்றது.

69 இலட்சம் இலங்கையர்களின் வாக்குகளைப் பெற்றே ராஜபக்ஷர்கள் மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார்கள். 'பௌத்தத்தின் காவலன்' என்ற அறிவிப்போடு ஜனாதிபதி பதவியை ஏற்ற கோட்டாபய, தன்னுடைய இரண்டு ஆண்டுகால பதவிக் காலத்துக்குள்ளேயே, 'தோல்விகரமான தலைவர்' என்கிற விமர்சனங்களை சந்திக்கத் தொடங்கிவிட்டார். அதுவும், அவரின் விசுவாசிகளாக, அவரது வெற்றிக்காகக் கடந்த காலத்தில் தொடர்ச்சியாக, இனவாதத் தீயை எழுப்பிய விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றோராலேயே விமர்சிக்கப்படுகிறார்.

அமெரிக்காவுடனான ஒப்பந்தமொன்றை, இரவோடு இரவாக அமைச்சரவைக்கு அறிவிக்காமல் மேற்கொண்ட ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு எதிராக, அமைச்சரவை அங்கத்தவர்களான அவர்கள் மூவரும் உயர்நீதிமன்றத்தை நாடியிருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் கொள்கை நிலைப்பாடுகளின் குளறுபடி, தோல்வி என்பவற்றின் தொடர்ச்சியாகவே ஆளுங்கட்சியின் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்காளிக் கட்சிகளும், தங்களது மனக்குமுறலை வெளிப்படுத்தி வருகின்றனர்.

கோட்டாவோ மஹிந்தவோ, ராஜபக்ஷ குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களோ மீண்டும் ஆட்சிக்கு வரும் போது, இவ்வாறான நெருக்கடியைச் சந்திப்போம் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. குறைந்தது பத்து ஆண்டுகளுக்காவது யாராலும் அசைத்துப் பார்க்க முடியாத ஆட்சியை செலுத்த வேண்டும் என்று ராஜபக்ஷர்கள் நினைத்தார்கள். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்பு, அவர்களின் ஆட்சி ஆரம்பித்த ஒரு சில மாதங்களுக்கு உள்ளேயே ஆட்டங்காணத் தொடங்கி விட்டது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அண்மித்த வெற்றியை, பொதுத் தேர்தலில் ராஜபக்ஷர்கள் பெற்றுக்கொண்டார்கள். எதிர்க்கட்சி வரிசையில் இருந்த முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் தவிர்ந்த அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் எந்தவித நிபந்தனைகளும் இன்றி ராஜபக்ஷர்களுக்கு ஆதரவளித்தும் வருகின்றனர்.

பிரதான எதிர்க்கட்சியோ, அரசாங்கத்துக்கு எதிராகப் பாரிய மக்கள் திரட்சியை ஏற்படுத்தும் போராட்டங்களை பெரியளவில் நடத்தவில்லை. ஒரேயொரு போராட்டத்தை மாத்திரமே, பாரிய ஏற்பாட்டோடு நடத்தியிருக்கின்றது. அந்தப் போராட்டத்தில் அரசாங்கத்தின் மீதான அதிருப்தியால், மக்களே தன்னெழுச்சியாகப் பங்கெடுத்திருந்தார்கள்.

அரசாங்கத்தின் தோல்விகரமான கொள்கைகளால் நாடு வங்குரோத்தை அடைந்துவிட்ட நிலையில், அவற்றுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஆக்கபூர்வமான கொள்கைகளோடு மக்களிடம் செல்ல வேண்டும். ஆனால், அந்த நிலையை எதிர்க்கட்சிகள் ஏற்படுத்தத் தவறியிருக்கின்றன.

அவ்வாறான நிலையில்தான், எதிர்க்கட்சி ஆற்ற வேண்டிய வேலைகளை, ஆளுங்கட்சியின் அமைச்சர்களும் பங்காளிகளும் செய்யத் தொடங்கியுள்ளார்கள். அரசாங்கத்தின் தோல்வி குறித்தும் புதிய நம்பிக்கையான ஆட்சிக்கான கனவு குறித்தும், அவர்கள் பேசுகிறார்கள். இவையெல்லாம், ராஜபக்ஷர்கள் மீதான அவநம்பிக்கையின் செய்தியாக, தொடர்ச்சியாக தென்னிலங்கை மக்களிடம் சேர்ப்பிக்கப்படுகின்றன. இதனால், ராஜபக்ஷர்கள் கோபத்தின் உச்சத்தில் இருக்கிறார்கள்.

எதிர்க்கட்சியின் விமர்சனங்களை ஆளுங்கட்சியொன்று எதிர்கொள்வது இயல்பானது. அதனைச் சமாளித்துவிட முடியும். ஆனால், ஆளுங்கட்சிக்குள் இருந்தே, ஆட்சிக்கு எதிராக எழும் விமர்சனங்கள், ஆட்சியைத் தோற்கடித்துவிடும். அதனைத் தடுப்பதற்காகவே, சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கப்பட்டிருக்கிறார். இது மற்றவர்களுக்கு ஒரு பயத்தை ஏற்படுத்தும் என்று கோட்டா நினைக்கிறார்.

ஆனால், கோட்டாவின் இந்தச் செயற்பாடு குறித்து, சிரேஷ்ட அமைச்சர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். டலஸ் அழகப்பெரும, தினேஷ் குணவர்தன போன்றோர், சுசில் பிரேமஜயந்த நீக்கத்தைத் தாங்கள் ரசிக்கவில்லை என்பதை ஊடகங்களின் முன்நிலையில் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். குறிப்பாக, அவரின் பதவி நீக்கம், அமைச்சரவைக்கு அறிவிக்கப்படாமல் ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்யப்பட்டிருப்பதாக டலஸ் அழகப்பெரும கூறியிருக்கிறார்.

இந்தத் தருணத்துக்காக காத்துக்கொண்டிருந்த மைத்திரிபால சிறிசேன, இதன்மூலம் ராஜபக்ஷர்களின் முதல் தேர்தல் தோல்வி நிகழ்ந்திருப்பதாக நையாண்டி செய்திருக்கிறார். அத்தோடு, 19ஆவது திருத்தம் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது பற்றி, மக்கள் இப்போதாவது அறிந்து கொள்வார்கள் என்றும் பேசியிருக்கிறார். 20ஆவது திருத்தத்தின் மூலம் அதிகாரங்கள் அனைத்தையும் ஜனாதிபதியிடம் கையளிக்கும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதனாலேயே யாருக்கும் அறிவிக்காமல், அமைச்சர்களை ஜனாதிபதியால் பதவி நீக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டு, தன்னுடைய ஆட்சிக்காலத்தின் சிறப்பு பற்றி புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்.

அரசாங்கத்தின் பங்காளியாக இருந்தாலும், சுதந்திரக் கட்சிக்கான மதிப்பு போதுமான அளவுக்கு அளிக்கப்படவில்லை என்பது மைத்திரி, தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் கோபம். இப்போது, அந்தக் கோபத்தைத் தீர்க்கும் கட்டம் வந்திருப்பதாக நினைக்கிறார்கள். அதன்மூலம், ராஜபக்ஷர்களுக்கு எதிரான பொதுக் கூட்டணியொன்றுக்கான அத்திவாரத்தைப் போட நினைக்கிறார்கள்.

ராஜபக்ஷர்களின் ஆட்சிக்கு எதிராக, எதிர்க்கட்சிகள் பொது கூட்டின் கீழ் ஒன்றிணைய வேண்டும் என்கிற உரையாடல்கள் தென் இலங்கையில் எழுந்திருக்கின்ற நிலையில், ராஜபக்ஷர்களுக்கு எதிராக, ஏற்கெனவே எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக இருந்த ஜனாதிபதியான மைத்திரி, தற்போதும் அந்த இடத்தை அடைவது குறித்து ஆசையோடும் ஆர்வத்தோடும் இருக்கிறார்.

இதனை அறிந்துதான், மைத்திரிக்கு எதிராக மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்டவர்களை ராஜபக்ஷர்கள் களமிறக்கி இருந்தனர். மைத்திரியின் ஆட்சிக்கால குறைபாடுகள் பற்றி, மஹிந்தானந்த பாராளுமன்றத்துக்குள் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். இதனையடுத்து சில நாள்கள் மைத்திரியும் மஹிந்தானந்தவும் பாராளுமன்றத்துக்குள் மோதிக்கொள்ள வேண்டி வந்தது. இவ்வாறான நிலைகளால்தான், ராஜபக்ஷர்களின் முதல் தேர்தல் தோல்வி என்று சுசில் பிரேமஜயந்தவின் நீக்கத்தை மைத்திரி விளித்திருக்கிறார்.

ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளேயே பாரம்பரிய அரசியல்வாதியான மஹிந்தவுக்கும், திடீர் அரசியல்வாதிகளான கோட்டா, பசில் உள்ளிட்டோருக்கும் இடையில் முரண்பாடுகள் பாரியளவில் அதிகரித்திருக்கின்றன.

மஹிந்தவை பிரதமர் பதவியில் இருந்து அகற்றிவிட்டு, அந்த இடத்தில் அமர வேண்டும் என்கிற எண்ணத்தில் பசில் ஏற்கெனவே காய்களை நகர்த்தத் தொடங்கிவிட்டார். ஏற்கெனவே, மஹிந்தவிடம் இருந்து நிதி அமைச்சைப் பெற்ற அவர், இப்போது பிரதமர் பதவியைப் பிடுங்க நினைக்கிறார். இதனால், பொதுஜன பெரமுனவுக்குள்ளேயே அவர் குழு அரசியலை செய்யத் தொடங்கிவிட்டார்.

ஏற்கெனவே, மஹிந்த ஆதரவு அரசியல்வாதிகளை கோட்டா தன்னுடைய அமைச்சரவைக்குள் பெரியளவில் மதிப்பதில்லை. அப்படியான நிலையில், பசிலும் அவ்வாறான ஆட்டமொன்றை ஆடத்தொடங்கியிருப்பது, பாரம்பரிய அரசியல்வாதியான மஹிந்தவுக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் பிடிக்கவில்லை.

அப்படியான தருணத்தில், பாரம்பரிய அரசியல்வாதிகளான சிரேஷ்ட அரசியல்வாதிகள், அமைச்சர்கள் ஆளுங்கட்சிக்கு எதிரான கருத்துகளை வெளிப்படுத்தக் கூடாது என்பதற்காகவுமே சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கம் நிகழ்ந்திருக்கிறது. இவ்வாறான பின்னணிகளை நோக்கினால், ஆளுங்கட்சிக்குள் இனி நிகழப்போகும் குத்து வெட்டுகளே, இலங்கை அரசியலின் அடுத்த கட்டங்களைத் தீர்மானிப்பவையாக அமையும்.

## கடிதங்கள்

### பொதுச் சந்தையை இயங்க வைக்கவும்

கிளிநொச்சி, ஜெயபுரம் பொதுச் சந்தை மூடப்பட்டுள்ளதாகவும் குறித்த சந்தையை இயக்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களும் பிரதேசத்தைச் சேர்ந்த பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். ஜெயபுரம் கிராமத்திலும் அதனைச் சூழவுள்ள அயல் கிராமங்களிலும் 1,500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பூநகரி பிரதேச சபைக்கு உட்பட்ட குறித்த பொதுச் சந்தையானது, கடந்த காலங்களில் நல்ல முறையில் இயங்கி வந்த பொதுச் சந்தையாகும். ஆனால், அண்மைய நாள்களாகக் குறித்த சந்தைக்கு அண்மித்த பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்களில் மரக்கறி, மீன் போன்ற வியாபாரங்கள் இடம்பெறுகின்றன. ஆனால், இதைக் கட்டுப்படுத்தி பொதுச் சந்தை வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேச சபை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் சந்தைக்குள் வியாபாரம் செய்யும் 13 வரையான வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்களும் பிரதேச மக்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த பொதுச் சந்தையில் அனைத்துக் கடைகளும் மூடப்பட்டுள்ள நிலையில், சந்தைத் தொகுதியை இயங்க வைப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்களும் வர்த்தகர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-யது பாஸ்கரன்



# சென்னை: நீக்கப்பட்ட ‘ஜெய் ஹிந்த்’ எவ்வாறு சேர்க்கப்பட்டது?

தமிழக சட்டசபை கூட்டத்தொடர் கலைவாணர் அரங்கில் ஆளுநர் ஆர். என் ரவியின் உரையுடன் நேற்று (05) தொடங்கியது. ஆளுநர் ஆர். என் ரவி உரையில் ‘ஜெய் ஹிந்த்’ என்ற வார்த்தை இடம்பெற்றமை, தமிழ்நாட்டில் அரசியல் ஆர்வலர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

இந்த முறை, ஆளுநரின் உரையை தமிழ்நாடு அரசின் நிதித்துறை தயாரித்துள்ளது. ஜனவரி முதலாம் திகதி, உரையின் ஆங்கில வடிவத்தை ராஜ்பவனுக்கு தி.மு.க அரசாங்கம் அனுப்பி இருந்தது.

இன்று ஆளுநர் உரையில், “தமிழ்நாடு அரசு கொரோனா பரவலை சிறப்பாக கையாண்டு வருகிறது. தமிழ்நாடு சட்டசபையில் முதல்முறையாக பேசுவது மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழ்நாடு சட்டப்பேரவை மிகப்பெரிய பாரம்பரியங்களை கொண்டது. கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்னோடியாக உள்ளது. தமிழகத்தில் வசிக்கும் இலங்கை தமிழர்களின் நலனைக் காப்பதில் அரசு உறுதியாக உள்ளது. இதற்காக நலத்திட்டங்கள் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. திராவிட கலாசாரம் என்பது சமூக நீதி மீது கவனம் செலுத்த கூடியது. சுயமரியாதை கொள்கை கொண்டது. மக்களை மேலே கொண்டு வரும் கொள்கையுடன் அரசு செயல்பட்டு வருகிறது” என்று ஆளுநர் தனது உரையில் சொன்னார்.

தனது உரையின் கடைசியில் ஆளுநர் ஆர். என் ரவி, மகாகவி பாரதியாரின் கவிதையுடன் “வாழ்க தமிழ்! வளர்க தமிழ்நாடு! எல்லோருக்கும் பொங்கல் வாழ்த்துகள். ஜெய் ஹிந்த்” என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழ்நாடு அரசு வெளியிட்டு இருக்கும் ஆளுநர் உரையின் முழு படிவத்தில் ‘ஜெய் ஹிந்த் என்ற வார்த்தை இடம்பெறவில்லை. ‘வாழிய செந்தமிழ்! வாழிய நற்றமிழ்! வாழிய பாரத் மணித்திருநாடு’ என்றுதான் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் உள்ளது. இருப்பினும் ஆளுநர் தனது உரையில் இந்த வார்த்தைகளைச் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆளுநர் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்த அ.தி.மு.க, விடுதலை சிறுத்தைகள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.




# கடலூர்: கட்டாயத் தடுப்பூசி செலுத்துவதை கண்டித்து ஆர்ப்பாட்டம்

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்காக மத்திய, மாநில அரசுகள் தடுப்பூசி செலுத்துவதைத் தீவிரமாக்கியுள்ளன. தற்போது 15 வயது முதல் 18 வயது வரையானவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், 2020 ஜூனில் மேகாலயா உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில், தடுப்பூசியை கட்டாயப்படுத்துவது இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான செயல் என அறிவித்தது.

அதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி அரசு அளித்துள்ள விடையில், “தமிழகத்தில் தடுப்பூசி செலுத்தப்படுவது கட்டாயப் படுத்தப்படவில்லை” என கூறியிருக்கும் நிலையில் தற்போது நடைமுறையில் குழந்தைகள், பொதுமக்களுக்கு அரசு கட்டாயப்படுத்தி தடுப்பூசி போடச் செய்து வருவதாக கூறி, “கட்டாயத் தடுப்பூசி சட்ட விரோதம்! விரும்புவோருக்கு மட்டுமே தடுப்பூசி போடுக!” என வலியுறுத்தி, கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பஸ் நிலையத்தில் தமிழ்த் தேசிய பேரியக்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மத்திய மாநில அரசுகளின் கட்டாய தடுப்பூசியை முறையை கண்டித்தும், கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு இழப்பீடு வழங்க கோரியும் முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# விற்பனைக்கு வந்த கொரோனா மாத்திரை



இந்தியாவில் கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில், அண்மையில் ‘மோல்னுபிரவீர்’ என்ற மாத்திரைக்கு இந்தியாவில் அவசரகால அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று யாருக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் ஆபத்து இருக்கிறதோ அவர்களுக்கு, சில விதிமுறைகளுக்கு உட்பட்டு, இந்த மாத்திரைகளை வழங்குவதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஐந்து நாள்களுக்கான ‘மோல்னுபிரவீர்’ மாத்திரையின் விலை 1,400 இந்திய ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ‘மோல்னுபிரவீர்’ மாத்திரை அடுத்த வாரம் முதல் இந்தியா முழுவதுமுள்ள மருந்தகங்களில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பெங்களூர்: தலைமறைவாக இருந்த முன்னாள் அமைச்சர் கைது



பண மோசடி வழக்கில் தலைமறைவாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அ.தி.மு.க) முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜியை, கர்நாடக மாநிலம் ஹசன் பகுதியில் தனிப்படை பொலிஸார் கைது செய்தனர்.

அ.தி.மு.க ஆட்சியில் பால்வளத் துறை அமைச்சராக இருந்தவர் ராஜேந்திர பாலாஜி. இவர், ஆவின் மற்றும் அரசு துறைகளில் வேலை வாங்கித் தருவதாக, மூன்று கோடி ரூபாய் வாங்கி, மோசடி செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுகுறித்து, விருதுநகர் மாவட்ட குற்றப்பிரிவு பொலிஸார் வழக்குப் பதிவுசெய்தனர். சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்டதால், ராஜேந்திர பாலாஜி தலைமறைவானார்.

கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் கடந்த 20 நாள்களுக்கும் மேலாக தேடப்பட்டு வந்த இவரை, கர்நாடக மாநிலம் ஹாசன் பகுதியில் உள்ள பி.எம் சாலையில், காரில் சென்றுகொண்டிருந்தபோது, தனிப்படை பொலிஸார் சுற்றி வளைத்து கைது செய்தனர்.

# சென்னை: தமிழகத்தில் ஆறு கோடி 36 இலட்சம் வாக்காளர்கள்

தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையகம் வெளியிட்டுள்ளது. அதில் 6.36 கோடி பேர் உள்ளனர். சோழிங்கநல்லூரில் அதிக வாக்காளர்களும் நாகை மாவட்டம் கீழ வேளூரில் குறைந்த வாக்காளர்களும் உள்ளனர்.

இதன்படி மொத்த வாக்காளர்கள் - 6,36,25,813

ஆண்கள் - 3,12,26,759

பெண்கள் - 3,23,91,250

மூன்றாம் பாலினம் - 7,804

அதிக வாக்காளர்கள் கொண்ட தொகுதி: சோழிங்கநல்லூர் (7,11,755 பேர்)

குறைந்த வாக்காளர்கள் கொண்ட தொகுதி- நாகை மாவட்டம் கீழ்வேளூர் ( 1,78,517)

# சபரிமலை: 750 கிலோ மீற்றர் நடந்து ஐயப்பனை தரிசித்த மாற்றுத் திறனாளி



ஆந்திர மாநிலம் நெல்லூரைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி சுரேஷ், 750 கிலோ மீற்றர் தூரம் நடந்து வந்து சபரிமலையில் ஐயப்பனை தரிசனம் செய்தார்.

‘மக்களை கொரோனாவில் இருந்து காக்க வேண்டும்’ என்ற வேண்டுதலுடன், சபரிமலை ஐயப்பனுக்கு மாலை அணிந்து, விரதம் இருந்து செப்டெம்பர் 20 நெல்லூரிலிருந்து புறப்பட்டு, ஊன்றுகோல் உதவியுடன் ஒற்றைக்காலில் 750 கிலோ மீற்றர் தூரம் நடந்து, நேற்று முன்தினம் (04) சன்னிதானம் வந்தடைந்தார். இவருக்கு சிறப்பு தரிசனத்துக்கு தேவசம்போர்ட் அதிகாரிகள் உதவினர்.

# பொகவந்தலாவையில் மகாராணியின் கோல்

பொதுநலவாய நாடுகளுக்கான மகாராணியின் கோலை ஏந்திய குழுவினர் (05) புதன்கிழமை காலை பொகவந்தலாவ கேர்க்கஸ்வோல்ட் தோட்ட தொழிற்சாலையை வந்தடைந்த போது, அவர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. (படம்: எஸ். சதீஸ்)



# பஸ் தரிப்பிடம் கையளிப்பு

குச்சவெளி பிரதேச எல்லைக்குட்பட்ட இறக்ககண்டி, நிலாவெளி பிரதேச மக்களின் நலன் கருதி, குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாரக்கின் பணிப்புரைக்கும், அப்பிரதேச வட்டார உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கமைவாக நிர்மானிக்கப்பட்ட பஸ் தரிப்பிடத்தை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு நேற்று (05) பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக்கால் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது பிரதேச சபை உறுப்பினர்களான எம்.ஐ.எம்.சலீம், திருமதி ஜெனா நிமலகாசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(படங்கள்: பைஷல் இஸ்மாயில்)




# மட்டக்களப்பில் குமார் பொன்னம்பலத்தின் 22 நினைவேந்தல்

தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தலைவர் குமார் பொன்னம்பலத்தின் 22 வது நினைவேந்தல் நிகழ்வு, மட்டக்களப்பு கட்சி காரியாலயத்தில் நேற்று (05) நடைபெற்றது.

மட்டக்களப்பு, அரசடி பிள்ளையர் வீதியில் அமைந்துள்ள கட்சியின் மாவட்ட காரியாலயத்தில், தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தலில், கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டு அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

2000 ஆம் ஆண்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலம், கொழும்பில் காரில் சென்று கொண்டிருந்தபோது இனம் தெரியாவதர்களால் சுட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

(படம்: கனகராசா சரவணன்)



# காணி உறுதி பத்திரங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படும் காணி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு, செவ்வாய்க்கிமை (04) பிரதேச செயலகத்தில் காணி கச்சேரி மூலம் 21 பயனாளிகளுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் செல்வி நிறஞ்சனா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிராம அலுவலர், காணிக்குழு உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகள், பயனாளிகள் கலந்து கொண்டுள்ளதுடன் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

(படம்: செ. கீதாஞ்சன்)



# தேசிய தொழில் தகைமை கற்கை நெறி மாணவர்களுக்கு சான்றிதழ்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது இளைஞர் சேவைகள் மன்ற பயிற்சி நிலையத்தில் 2018 ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை தேசிய தொழில் தகைமை கணினி கற்கைநெறிகளை பூர்த்தி செய்த இளைஞர், யூவதிகளுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு வியாழக்கிழமை (30) தேசிய பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி எம்.ஐ.எம். கரூன் தலைமையில் தென்கிழக்குப் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண பணிப்பாளர் எம். பீ. சந்திரபால், மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர், பயிற்சி நிலைய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(படம்: பாறுக் ஷிஹான்)



சீனா

# நிலச்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழப்பு

சீனாவின் குய்சோவ் மாகாணத்தின் பிஜி நகரில், வைத்தியசாலையொன்றின் கட்டுமானப் பணியின் போது, திடீரென ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (4) இடம்பெற்ற இவ்விபத்தில், தொழிலாளர்கள் 17 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கிய நிலையில் 14 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் 3 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த மூவரின் உடல்நிலை தற்போது சீராக இருப்பதாகவும் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அவுஸ்திரேலியா

# நடக்கும் மீன்

அவுஸ்திரேலியாவில் pink hand fish எனப்படும் செட்டைகளைப் பயன்படுத்தி நடக்கக்கூடிய அரியவகை மீனினமொன்று சுமார் 22 வருடங்கள் பின்னர் மீண்டும் தென்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மீனானது டாஸ்மானியா என்னும் தீவின் கடற்கரை பகுதியில் காணப்பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து வெளியான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஜேர்மனி

## பிரம்மிக்க வைக்கும் மெர்சிடஸ் பென்ஸின்

# 'Vision EQXX'

1000 கிலோ மீற்றர் வரை தொடர்ந்து பயணிக்கக் கூடிய 'Vision EQXX' என்ற புதிய அதிநவீன மின்சாரக் காரை ஜேர்மனியின் மெர்சிடஸ் பென்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்ற நுகர்வோர் மின்னணு கண்காட்சியில், இக்காரானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1,750 கிலோ கிராம் எடை கொண்ட இக்காரானது, சந்தையில் உள்ள மின்சாரக் கார்களிலேய மிகக் குறைந்த எடை கொண்டதாகும்.

மேலும் இதன் பட்டரி செயலிழந்தால், உடனடியாக உதவிடும் வகையில், காரின் மேற்கூரையில் 117 சோலார் செல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒரு நாளைக்கு 25 கிலோ மீற்றர் தொலைவுக்குக் கூடுதலாக செல்லும் வகையில் சூரிய மின்சக்தி கிடைக்கும்.

அத்துடன் இதன் பட்டரியை ஒருமுறை சார்ஜ் செய்தால் 1,000 கிலோ மீற்றர் வரை தொடர்ந்து பயணிக்கலாம். காரில் உள்ள பெரிய கண்ணாடி திரையில் வீடியோக்களையும், 3-டி முறையிலான பாதையின் ஜிபிஎஸ் காட்சிகளையும் காணலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# உங்கள் உதடு இப்படி இருந்தால் ஆபத்து

## மருத்துவர்கள் எச்சரிக்கை

மனிதர்களின் தோல், உதடுகள், நகங்கள் சாம்பல் நிறத்தில் அல்லது நீல நிறத்தில் காணப்படுவது ஆபத்தானது என அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து அமெரிக்காவின் நோய் தடுப்பு மையம் தெரிவித்திருப்பதாவது, ஒருவருக்கு தோல், நகங்கள், உதடுகள் சாம்பல் நிறத்தில் அல்லது நீல நிறத்தில்



இருந்தால் உடனடியாக மருத்துவமனை செல்ல வேண்டும். ஏனெனில் இவை ஒமிக்ரோன் தொற்றின் அறிகுறிகளாகக் கருதப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

# கொண்டை ஊசியால் வீடு வாங்கிய பெண்

கொண்டை ஊசியை விற்பனை செய்து அதன் மூலம் ஈட்டிய வருமானத்தில் இளம்பெண் ஒருவர் 80 ஆயிரம் டொர் மதிப்புள்ள வீடொன்றை வாங்கியுள்ள சம்பவம் அமெரிக்காவில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவைச் சேர்ந்த 30 வயதான டெமி ஸ்கிப்பர் என்பவர் டிக்-டொக் செய்வதில் ஆர்வம் கொண்ட இவர் கடந்த 2020ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கின் போது, பிரபல யூடியூப் தளமொன்றில் வர்த்தகம் செய்வது தொடர்பான வீடியோவைப் பார்த்த அவர் அவ்வீடியோவால் ஈர்க்கப்பட்டு டிக்-டொக் மூலம் வர்த்தகம் செய்யும் பாணியை ஆரம்பித்தார்.

அந்தவகையில், டிக்-டொக் விடியோக்களின் மூலம் கொண்டை ஊசிகளை விற்பனை செய்யத் தொடங்கினார். இந்நிலையில் தற்போது அவரது பக்கத்தை 50 லட்சத்திற்கும் அதிகமானோர் அவரை பின்தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நியூசிலாந்தை முதல் தடவையாக வீழ்த்திய பங்களாதேஷ்

டெஸ்ட் போட்டிகளில் முதற் தடவையாக நடப்புச் சம்பியன்களான நியூசிலாந்தை பங்களாதேஷ் வீழ்த்தியுள்ளது.

மௌன்ட் மகட்டரேயில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த முதலாவது டெஸ்டின் நேற்றைய ஐந்தாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த நியூசிலாந்து, எபொடொட் ஹொஸைன், தஸ்கின் அஹ்மட், மெஹிடி ஹஸன் மிராஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 169 ஓட்டங்களையே பெற்றது.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் 40 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், டிம் சௌதி மற்றும் கைல் ஜேமிஸன் ஆகியோரிடம் ஷட்மன் இஸ்லாம், நஜ்முல் ஹொஸைன் ஷன்டோவை இழந்தபோதும் 2 விக்கெட் இழப்புடன் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக எபொடொட் ஹொஸைன் தெரிவானார்.

அந்தவகையில், இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில் 1-0 என பங்களாதேஷ் முன்னிலை வகிக்கின்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

நியூசிலாந்து: 328/10 (துடுப்பாட்டம்: டெவோன் கொன்வே 122, ஹென்றி நிக்கொல்ஸ் 75, வில் யங் 52, றொஸ் டெய்லர் 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொரிஃபுல் இஸ்லாம் 3/69, மெஹிடி ஹஸன் மிராஸ் 3/86, மொமினுல் ஹக் 2/6, எபொடொட் ஹொஸைன் 1/75)

பங்களாதேஷ்: 458/10 (துடுப்பாட்டம்: மொமினுல் ஹக் 88, லிட்டன் தாஸ் 86, மஹ்முடுல் ஹஸன் றோய் 78, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 64, மெஹிடி ஹஸன் மிராஸ் 47, யாசிர் அலி 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெண்ட் போல்ட் 4/85, நீல் வக்னர் 3/101, டிம் சௌதி 2/114, கைல் ஜேமிஸன் 1/78)

நியூசிலாந்து: 169/10 (துடுப்பாட்டம்: வில் யங் 69, றொஸ் டெய்லர் 40 ஓட்டங்கள். பந்துவீச்சு: எபொடொட் ஹொஸைன் 6/46, தஸ்கின் அஹ்மட் 3/36, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/43)

பங்களாதேஷ்: 42/2 (பந்துவீச்சு: கைல் ஜேமிஸன் 1/12, டிம் சௌதி 1/21)

போட்டியின் நாயகன்: எபொடொட் ஹொஸைன்

## தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் இந்தியா

தென்னாபிரிக்காவு க்கெதிரான இரண்டாவது டெஸ்டில் முன்னிலையில் இந்தியா காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், ஜொஹன்னஸ்பேர்க்கில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இந்த டெஸ்டின் நேற்று முன்தின இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 35 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த தென்னாபிரிக்கா, இனிங்ஸை நகர்த்திய நிலையில் 28 ஓட்டங்களுடன் அணித்தலைவர் டீன் எல்கரை ஷர்துல் தாக்கூரிடம் இழந்தது.

பின்னர் சிறிது நேரத்தில் கீகன் பீற்றர்சனை 62 ஓட்டங்களுடன் தாக்கூரிடம் இழந்த தென்னாபிரிக்கா, றஸி வான் டர் டுஸனை உடனேயே தாக்கூரிடம் பறிகொடுத்தது. இதைத் தொடர்ந்து தெம்பா பவுமா, கைல் வெரைன் ஆகியோர் இனிங்ஸை மீளக் கட்டியெழுப்பிய நிலையில், தாக்கூரிடம் 21 ஓட்டங்களுடன் வெரைன் வீழ்ந்ததுடன், சிறிது நேரத்தில் 51 ஓட்டங்களுடன் பவுமாவும் தாக்கூரிடம் வீழ்ந்தார். உடனேயே ககிஸோ றபாடாவும் மொஹமட் ஷமியிடம் வீழ்ந்திருந்தார்.

இதைத் தொடர்ந்து மார்கோ ஜன்சன், கேஷவ் மஹராஜ் ஆகியோர் இனிங்ஸை நகர்த்திய நிலையில், 21 ஓட்டங்களுடன் ஜஸ்பிரிட் பும்ராவிடம் மஹராஜ் வீழ்ந்ததோடு, ஜன்சனும் குறிப்பிட்ட நேரத்தில் 21 ஓட்டங்களுடன் தாக்கூரிடம் வீழ்ந்ததோடு, உடனேயே லுங்கி என்கிடியும் உடனே தாக்கூரிடம் விழ தமது முதலாவது இனிங்ஸில்



> செட்டேஸ்வர் புஜாரா அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய நிலையில் நேற்று முன்தினம் இரண்டாம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 85 ஓட்டங்களை தமது இரண்டாவது இனிங்ஸில் இந்தியா பெற்றுள்ளது

சகல விக்கெட்டுகளையும் இழந்து 229 ஓட்டங்களை தென்னாபிரிக்கா பெற்றது.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா சிறிது நேரத்திலேயே பதில் அணித்தலைவர் லோகேஷ் ராகுலை ஜன்சனிடம் இழந்தது. பின்னர் குறிப்பிட்ட நேரத்தில் 23 ஓட்டங்களுடன் டுவன்னே ஒலிவியரிடம் மாயங்க் அகர்வாலை இழந்தது.

எனினும், செட்டேஸ்வர் புஜாரா அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய நிலையில் நேற்று முன்தினம் இரண்டாம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 85 ஓட்டங்களை தமது இரண்டாவது இனிங்ஸில் இந்தியா பெற்றுள்ளது. களத்தில், புஜாரா 35, அஜின்கியா ரஹானே 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 202/10 (துடுப்பாட்டம்: லோகேஷ் ராகுல் 50, இரவிச்சந்திரன் அஷ்வின் 46, மாயங்க் அகர்வால் 26, ஹனும விஹாரி 20, றிஷப் பண்ட் 17, ஜஸ்பிரிட் பும்ரா ஆ.இ 14 ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்கோ ஜன்சன் 4/31, ககிஸோ றபாடா 3/64, டுவன்னே ஒலிவியர் 3/64)

தென்னாபிரிக்கா: 229/10 (துடுப்பாட்டம்: கீகன் பீற்றர்சன் 62, தெம்பா பவுமா 51, டீன் எல்கர் 28, கைல் வெரைன் 21, மார்கோ ஜன்சன் 21, கேஷவ் மஹராஜ் 21 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷர்துல் தாக்கூர் 7/61, மொஹமட் ஷமி 2/52, ஜஸ்பிரிட் பும்ரா 1/49)

இந்தியா: 85/2 (துடுப்பாட்டம்: செட்டேஸ்வர் புஜாரா ஆ.இ 35, மாயங்க் அகர்வால் 23 ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்கோ ஜன்சன் 1/18, டுவன்னே ஒலிவியர் 1/22)

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 06 ஜனவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.